00091

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்

மட்டம் - 05

**LLU5811– சுற்றாடல் சட்டம்**

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை II - 2023/2024

காலம் : ஒரு (01). மணித்தியாலம்

திகதி : 10.01.2025 நேரம்: பி.ப 01.30 - பி.ப 02.30

பின்வரும் வினாவிற்கு விடையளிக்குக.
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. நீலா என்பவள் இலங்கையின் தென்மாகாணத்தில் வசிக்கும் 10 வயதுடைய சிறுமி ஆவாள். அவளுடைய கிராமமானது கடந்த மூன்று வருடங்களாக வெள்ளத்தாலும் வறட்சியாலும் பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளது. ஒரு விவசாயியான அவளுடைய தந்தை குடும்பத்தை பராமரிக்க பயிற்செய்கை செய்ய இயலாது இருக்கிறார். நீலா கடந்த வருடம் பாடசாலைக்கு சென்றிருக்கவில்லை. நீலா வசிக்கின்ற கிராமத்திற்கு அருகாமையில் இன்னுமொரு அனல் மின்நிலையம் கட்டுவதற்கு அரசாங்கம் பரிந்துரைத்துள்ளது.

   நீலா தன் தந்தையினூடாக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை தாக்கல் செய்து உள்ளாள். அவள் காலநிலை மாற்றத்தினாலான விளைவுகளை தணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்றுரைப்பதுடன், தன் தந்தை போன்ற விவசாயிகள் தமது வாழ்வாதாரத்தை விவசாயத்தில் தொடர்வதற்கு ஆதரிக்கவில்லை என்றும் குற்றம் சாட்டுகிறாள். மேலும் தானும், தன் கிராமத்திலுள்ள மற்ற பிள்ளைகளும் ஒரு வருடகாலம் பாடசாலைக்கு செல்ல இயலாதிருப்பதால் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் முறையிடுகிறாள். மேலும் அரசாங்கத்தின் அனல் மின்நிலையத்தை கட்டுவதற்கான திட்டமானது நிலையான அபிவிருத்தி அல்ல என்றும், அது காலநிலை மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் வாதிடுகிறாள்.

   இவ்வழக்கின் நீதிபதி நீர் எனக் கருதுக. நீலாவால் முன்வைக்கப்பட்ட வாதங்கள் இலங்கையின் அரசியலமைப்பு உறுப்புரைகள், பிற இலங்கைச்சட்டங்கள், தீர்ப்புச்சட்டங்கள் மற்றும் சுற்றாடல் சட்டக் கோட்பாடுகள் என்பவற்றின் அடிப்படையில் எவ்வாறு எடுத்துக்காட்டப்படலாம் என விளக்குக. நீர் பாகிஸ்தான் வழக்கான ***Rabab Ali v. Federation of Pakistan & Another (Constitution Petition 2006)*** என்பதனையும், வேறு பிற நியாயாதிக்கங்களின் தொடர்புடைய வழக்குகளையும் உமது தீர்ப்பில் கருத்திற்கொள்ளலாம்.

(20 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமை பெற்றது -